**சமுர்த்தி நிதியம் - 2024**

**-----------------------------------------**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சமுர்த்தி நிதியத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டு கொள்கைகளுக்குரிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினது ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தாக்கங்கள் நீங்கலாக, நிதியத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பு ஒன்றாக காணப்பட்டதுடன், மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதலும் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காளரின் பொறுப்பு**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம் இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- நிதியத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கூட்டுத்தாபனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். அத்துடன் அந்த

வெளிப்படுத்தல்கள் போதியளவினதாக காணப்படாவிடின் எனது அபிப்பிராயத்தை மாற்றியமைக்க வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிதியத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிதியத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிதியம் இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்களின் முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் நடைமுறைப்படுத்தல், உரிய நிதியிடல் நியமங்களுக்கிணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்கான கணக்கறிக்கையை பேணுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் குறிப்பான அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களுக்கு பிரவேசித்தல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணகளித்தகைமை பேணப்பட்டு சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியினுள் ஒப்பிடல் மற்றும் வேறுபாடுகள் காணப்படுமாயின் அவை தொடர்பில் உரிய நடவடிக்கை எடுத்தல் ஆகியவற்றுக்காக நியாயமான உறுதிப்பாடொன்றை பெற்றுக்கொள்ள போதியளவான "சிறப்பான முறையில் திட்டமிடப்பட்ட" உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு கட்டமைப்பொன்றினை நிறுவனத்தினால் நடாத்திச் செல்லப்படல் அவசியமானதாகும்.

### 1.5.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 1 இன் பிரகாரம், அறிக்கையிடும் காலப்பகுதியினுள் உப்பாய்ச்சல் அல்லது தேறிய சொத்துக்களின் அதிகரிப்பு காரணமாக | ஆண்டிற்கான மிகையை அதிகரித்து காண்பிப்பதனையும் மீளாய்வாண்டின் நிதியத்திற்கு செலவு வைத்தமையையும் | நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| கிடைக்கும் பொருளாதார நலன் அல்லது சேவைகளின் இயலுமைகளில் தேறிய உட்பாய்ச்சல் ஆனபோதிலும், 2017 நவம்பர் குண்டசாலை ஹாரகம நீர் செயல்திட்டத்திற்காக சமுர்த்தி நிதியத்தில் இருந்து தேசிய நீர் வளங்கள் மற்றும் வடிகாலமைப்பு சபைக்குச் செலுத்தப்பட்டிருந்த ரூபா 300 மில்லியன் தொகையில் எஞ்சி இருந்த ரூபா 45,205,328 தொகை மீளாய்வாண்டின் போது வருமானமாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக மீளாய்வாண்டின் போது மிகையானது அந்த அளவினால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும் இந்த பணம் 2023 ஆம் ஆண்டின் போது சமுர்த்தி திணைக்களத்திற்கு கிடைத்திருந்ததுடன் மீளாய்வாண்டின் போது நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | |

### 1.5.3 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் நிதி நிலைமை கூற்றின் பிரகாரம் பெற வேண்டிய முதலீட்டு வட்டி ரூபா 218,956,499 ஆனபோதிலும், மேற்கொள்ளப்பட்ட கணிப்பீடுகளின் அடிப்படையில் அந்த வட்டி தொகை ரூபா 218,346,499 ஆகும். அதன் பிரகாரம் பெற வேண்டிய முதலீட்டு வட்டி ரூபா 610,000 இனால் அதிகரித்து கணக்கு வைக்கப்பட்டிருந்த காரணத்தால் ஆண்டிக்கான வருமானம் மற்றும் நடைமுறை சொத்துக்கள் அந்த அளவினால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டுக்கு உரிய வட்டியினை கணிப்பிடும் போது நாட்களில் மேற்கொள்ளப்பட்ட வேறுபாடு காரணமாக ஏற்பட்டிருந்த இந்த வேறுபாட்டினை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | கணிப்பீடுகளை சரியாக மேற்கொண்டு துல்லியமாக கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நிதிச்செயலாற்றல் கூற்றுகளில் வருமானத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த முதலீட்டு வட்டியானது ரூபா 306,945,255 ஆன போதிலும் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீடுகளின் பிரகாரம் அந்த வட்டி ரூபா 306,335,255 ஆக காணப்பட்டமையால் மீளாய்வாண்டின் முதலீட்டு வட்டி | -மேற்படி- | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | அந்த அளவினால் அதிகரித்து கணக்கு வைக்கப்பட்ட காரணத்தால் ஆண்டின் மிகை அந்த அளவினால் அதிகரித்து கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | | |
| (இ) | மீளாய்வாண்டின் நிலையான வைப்புக்களில் ஆண்டுக்கு உரிய அட்டுறு நிறுத்தி வைத்தல் வரி கணிப்பீடுகளின் பிரகாரம் ரூபா 8,789,739 ஆனபோதிலும், நிதி நிலைமை கூற்றில் அந்த பெறுமதியானது ரூபா 10,516,665 ஆக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. அதற்கமைய அட்டுறு நிறுத்தி வைத்தல் வரி ரூபா 1,726,926 இனால் அதிகரித்து கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஈ) | காசுப்பாய்ச்சல் கூற்றில் செலவினங்களின் கீழ் நிறுத்தி வைத்தல் வரி ரூபா 25,728,975 ஆக கணக்கு வைக்கப்பட்டிருந்ததுடன் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீடுகளின் பிரகாரம் பெறுமதி ரூபா 25,880,871 ஆக காணப்பட்டது. அதற்கமைய மீளாய்வாண்டின் நிறுத்தி வைத்தல் வரி ரூபா 151,896 ஆக குறைத்து காசுப்பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளுக்கு உரிய வட்டி கணிப்பீடுகளை மேற்கொள்ளும் போது ஏற்பட்ட வேறுபாடு காரணமாக நிறுத்தி வைத்தல் வரி தொகையும் வேறுபட்டுள்ளது. அதனை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | -மேற்படி- |
| (உ) | மீளாய்வாண்டின் நிதிச்செயலாற்றல் கூற்றில் செலவினங்களின் கீழ் நிறுத்தி வைத்தல் வரி ரூபா 15,476,129 ஆக கணக்கு வைக்கப்பட்டிருந்ததுடன், மேற்கொள்ளப்பட்ட கணிப்பீடுகளின் பிரகாரம் அப்பெறுமதி ரூபா 13,901,099 ஆகும். அதற்கமைய நிறுத்தி வைத்தல் வரி ரூபா 1,575,030 இனால் அதிகரித்து கணக்கு வைக்கப்பட்ட காரணத்தால் அந்த அளவினால் மீளாய்வாண்டுக்குரிய மிகையும் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஊ) | கடந்த வருடத்திற்காக செலுத்தப்பட்ட ரூபா 297,360 தொகையான கணக்காய்வு | மீளாய்வாண்டின் செலவினமாக கணக்கு வைக்கப்பட்டமையை | சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| கட்டணங்கள் மீளாய்வாண்டின் செலவினம் ஒன்றாக கணக்கு வைக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் கணக்காய்வு கட்டணங்களுக்கான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 15 ஆம் பந்தியின் மூலம் நிறுவப்பட்டிருந்த நிதிப்பிரமாணம் 877 (2) (ஈ) | நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் கணக்காண்டு நிறைவடைந்து 2 மாதங்களினுள் செயலாற்றல் அறிக்கையுடன் திறைசேரியின் அரச நிதி திணைக்களத்திற்கு பிரதி ஒன்றுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களுடன் செயலாற்றல் அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது செயலாற்றல் அறிக்கையையும் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | சுற்றறிக்கைகள் மற்றும் விதிமுறைகளின்படி செயல்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 336,964,484 ஆன மிகையாக காணப்பட்டதுடன், அதனோடு ஒத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 437,833,541 தொகை ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 100,869,057 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு முதலீட்டு வட்டி வருமானம் குறைவடைந்தமை முக்கியமான காரணமாக அமைந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிதியத்தின் பிரதான பணிகளுக்கு புறம்பாக 2014 ஆம் ஆண்டின் போது தேசத்திற்கு மகுடம் (ஓடு செயற்திட்டம்) இற்காக திறைசேரியினால் வழங்கப்பட்டிருந்த ரூபா 212,000,000 தொகை மீளாய்வாண்டின் போது நடைமுறை சொத்துக்களின் கீழ் பெறவேண்டிய பெறுமதி மற்றும் பெற வேண்டிய பணத்திற்கான ஒதுக்கமாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. இலங்கை பொதுத்துறை கணக்கிட்டு நியம இலக்கம் 08 இன் 39 ஆம் பந்தியின் பிரகாரம் நிகழத்தக்க சொத்தொன்றாக இனம் காணப்பட வேண்டியதுடன், 105 ஆம் பந்தியின் பிரகாரம் பொருளாதார நலன்கள் அல்லது சேவை இயலுமைகள் ஆகியவற்றின் உட்பாய்ச்சல் காணப்படும் சந்தர்ப்பத்தில் நிறுவனம் ஒன்றினால் அறிக்கையிடும் திகதியில் உள்ளபடியான நிகழத்தக்க சொத்துக்களின் தன்மைகளினை பொழிப்பாக்கிய விபரங்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | தேசிய சபையின் தீர்மானத்தின் பிரகாரம் நிதியத்தின் செலவினம் ஒன்றாக கணக்கு வைப்பதற்கும், அதனுடன் நிகழத்தக்க சொத்துக்களின் தன்மைகள் தொடர்பில் விபரங்களை வெளிப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | பெறவேண்டிய பணம் தொடர்பில் நியமத்தின் பிரகாரம் துல்லியமாக கணக்கு வைக்கப்பட வேண்டும். |

### 3.2 செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| திறைசேரியின் நிதியேற்பாட்டின் அடிப்படையில் 2007 ஆம் ஆண்டு கடற்றொழில் மற்றும் விலங்கு கட்டுப்பாட்டு செயற்திட்டத்திற்காக மீள அறவிடும் அடிப்படையில் சமுர்த்தி நலனாளிகளுக்கு கடன் வழங்குதல் இடம் பெற்றிருந்தது. கடனை அறவிடுதல் 2007 ஜுலை 16 ஆம் திகதிய ச/அதி/10/ஜாச/கம் ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் கம்புபுது சுழற்சி கணக்கிற்கு செலவு வைக்க தீர்மானிக்கப்பட்டிருந்தது. சமுர்த்தி வங்கியினால் இந்த கடன் அறவிடுதல் மீள கடன் வழங்குதல் ஆகிய தொடர்பில் எந்த ஒரு அறிக்கையும் சமுர்த்தி நிதியத்திற்கு | சமுர்த்தி வங்கி ஒன்றியிடமிருந்து ரூபா 13,917 படியாக 1074 சமுர்த்தி வங்கிகளில் இருந்து மாவட்ட செயலகங்களின் ஊடாக பணம் அறவிடப்படுகின்றமை. | நிலுவை பணத்தை துரிதமாக அளவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

சமர்ப்பிக்கவில்லை. அதற்கு அமைய ரூபா 14,947,065 ஆன மீதி ஒன்று சமுர்த்தி நிதியத்தின் நிதிக்கூற்றுகளில் பெறவேண்டிய கடற்றொழில் மற்றும் விலங்கு கட்டுப்பாடு ஆக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் இதுவரையிலும் கடன் அறவீடுகள் மற்றும் வளங்கள் தொடர்பில் எந்த ஒரு தகவலும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. இதற்கமைய நிதியத்தின் பணிகளான வருமானம் ஈட்டும் செயல் திட்டங்களில் இருந்து கிடைக்கும் தவணைகள் மற்றும் வாடகை வருமானங்களை சேகரித்தல் மற்றும் நாடு முழுவதும் செயற்படும் செயல்திட்டங்களில் இருந்து கிடைக்கும் வருமானங்கள் / முதலீடுகள் / மீள் முதலீடு செய்தல் ஆகியவை நிதியத்தினால் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.